SOND

*இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.*

*T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk*

# மாதாந்த அறிக்கை

புரட்டாதி, 2012.

## Social Organizations Networking for Development

**RKM Road**
**Akkaraipattu**

**No. 19, Saravana Road**
**Kallady Batticaloa.**

**60" Arasady Road**
**Jaffna.**

## இதழின் உள்ளே

1. அம்பாறை
2. மட்டக்களப்பு
3. யாழ் ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

SOND

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 18 ஆண், 22 பெண் உள்ளடங்கலாக 40 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

### நடைபெற்ற கலந்துரையாடல் விபரம்.

காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் கலந்துரையாடலும்,திரைப்படக்காட்சி காண்பித்தலும் நடாத்தப்படுகின்றது.

இம்மாதம் சிறுவர்களுக்கான 3 கலந்துரையாடல்கள் பணியாளர் தி.ஜெனிதா அவர்களினால் நடாத்தப்பட்டுள்ளது. இதில் 18 ஆண், 24 பெண்கள் உட்பட 42 சிறுவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

### கலந்துரையாடப்பட்ட விடயங்கள் கீழ்வருமாறு

1. அக்கரைப்பற்று ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக அறநெறி வகுப்பு ஒன்றினை நடாத்த திட்டமிட்டுள்ளார்கள். அதற்கமைவாக எமது கழகத்தில் உள்ள 13 சிறுவர் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளது.
2. எதிர் வரும் மாதம் சிறுவர் தினத்தினை முன்னிட்டு கழக உறுப்பினர்களை உள்ளடக்கி கலைநிகழ்ச்சிகள் செய்ய வேண்டும் எனவும் இவ்நிகழ்ச்சிகளில் அனைத்து சிறுவர்களும் பங்குகொள்ள வேண்டும் எனவும் கூறப்பட்டது.

### சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. இம் மாதம் 02,09,23 ஆம் திகதிகள் அன்று காந்தி கழக சிறுவர்களுக்கு மூன்று சிங்கள வகுப்பு கழக தலைவாரான சனத் தலைமையில் நடைபெற்றது. இவ் மூன்று வகுப்பிலும் 35 சிறுவர்கள் கலந்துகொண்டுள்ளார்கள்.

### SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. இக் கழகத்தின் கீழ் செயற்படும் சிறுவர்களுக்கான ஆங்கில வகுப்பானது பணியாளர் சுரேஸ்குமாரினால் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் நடை பெற்றுவருகின்றது இதனடிப்படையில் இம்மாதம் 3 வகுப்புக்களில் 42 சிறுவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

02. காந்தி கழக சிறுவர்களிற்கான திரைப்படக் காட்சி காண்பிக்கப்பட்டுவருகின்றது. இம்மாதம் 3 திரைப்படக்காட்சி 45 சிறுவர்களிற்கு காண்பிக்கப்பட்டுள்ளது.





SOND

## 03. தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 8 தலைப்பில் 71 புத்தகங்களையும் 6 தலைப்பில் 29 இறு வெட்டுக்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

## பணியாளர் கலந்துரையாடல்

திட்டம், அலுவலக செயற்பாடுகளினை மேம்படுத்துவது தொடர்பாக 2012.09.22 ம் திகதியன்று பணியாளர் கலந்துரையாடலானது அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் தலைமையில் அக்கரைப்பற்று SOND அலுவலகத்தில் நடை பெற்றது. இதில் மட்டக்களப்பு அம்பாறை சொண்ட் பணியாளர்கள் கலந்து கொண்டுள்ளார்.

## பாலர்பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கச் செயற்பாடு

கடந்த 2012.07 ம் மாதம் சிவாச்சரிட்டி அமைப்பினால் பாலர் பாடசலை ஆசிரியருக்கான பயிற்சி கொழும்பில் நடைபெற்றது. இப் பயிற்சியில் எமது அமைப்பின் கீழ் செயற்படும் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டு 2012.09.07 ல் CRC பாலர் பாடசாலையினுடைய ஆசிரியர், மாணவர்கள் இணைந்து பயிற்சியில் செய்து காண்பிக்கப்பட்ட ஆக்கச் செயற்பாட்டினை மேற்கொண்டுள்ளார்கள். இச்செயற்பாட்டில் 83 மாணவர்களும்,03 ஆசிரியைகளும் கலந்துகொண்டுள்ளார்கள்.

## கணனி வகுப்பு

சமூகத்தில் உள்ள இளையோர், சிறுவர்களுடைய கணனிப் பாவனையை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அமைப்பில் கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம் மாதம் 10 சிறுவர்கள் 08 தடவையும், 10 இளையோர்கள் 08 தடவையும் கணனியைப் பயன்படுத்தியுள்ளனர்.





# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள்

எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல் . **(Create a conducive Society for Good Environment for the Future).**

மேற்படி திட்டத்தினை மட்டக்களப்பு மாவட்டத்திலும் ,அம்பாறை மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்துவதற்கு டயக்கோனியா நிறுவனம் அனுசரணை வழங்குகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு,கோரளைப்பற்று தெற்கு கிரான், ஆரையம்பதி ,பட்டிப்பளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்படி திட்டத்திற்குரிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். அந்த வகையில் இத்திட்டம் சம்பந்தமாக செப்டம்பர் மாதம் நடைமுறைப்படுத்திய திட்டச்செயற்பாடுகளை விபரமாக கீழே தருகின்றோம்.





## காலநிலைமாற்றமும் சூழல் பாதுகாப்பும் (Climate Change & Environmental protection )

மேற்படி செயற்பாட்டின் கீழ் கல்லடி மணிக்கூட்டுக்கோபுரம் தொடக்கம் ஊறணி வரையுமான வீதியில் நிழல் மரங்களை நட்டுள்ளோம். முதற்கட்டமாக மட்டக்களப்பு மாநகர சபை எமக்கு நீர் ஊற்றுதலுக்கான உதவியினை வழங்கி வருகின்றது.
ஆவணி மாதம் மரங்களுக்கு பசளை இட்டு பராமரித்திருந்தோம் அதனைத்தொடந்து மரக்கன்றுகளுக்கு சிறுபுழுக்களினால் பாதிப்பு ஏற்பட்டு இலைகள் உதிரத்தொடங்கியது. அதனைக்கருத்தில் கொண்டு விவசாயப்போதனாசிரியரின் ஆலோசனைப்படி “பட்டாஸ் குளோரபைரிபொஸ்” மருந்தினை 28.09.2012 தெளித்திருந்தோம். அத்துடன் மரங்களுக்குரிய கூடுகளையும் சரி செய்தும் பராமரிக்கப்பட்டது. தற்பொழுது மக்களும் (கடை உரிமையாளர்கள்) சில மரங்களுக்கு தினம் தோறும் நீர் ஊற்றி பராமரிப்பதனையும் அவதானிக்க முடிகின்றது.

தொடர்ச்சியாக இவ்வருடத்தில் கல்லடியிலிருந்து மஞ்சன்தொடுவாய் வரைக்குமான வீதியில் 30 மரங்களை நடுவதற்கான ஏற்பாடுகள் செய்வதுடன் அதற்குரிய கூடுகளையும் தயார் செய்துள்ளோம். தொடர்ந்து வாரத்திற்கு 3 நாட்கள் நீர் ஊற்றப்பட்டு மரங்கள் பராமரிக்கப்படுகின்றது. தற்பொழுது நகர அபிவிருத்தி அதிகாரசபை நகரை அழகுபடுத்தும் வேலைகளை இராணுவத்துடன் இணைந்து ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

SOND

## மக்கள் பங்களிப்புடன் இயற்கை வளங்களை பாதுகாத்தல்
## (Support for community based natural resource management in 2 villages).

பெரிய உப்போடை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தும் திட்டத்தில் கடந்த மாதம் சீலாமுனை கிராமத்தில் மாநகர சபையினால் வழங்கப்பட்ட குப்பை அகற்றும் இயந்திரத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதனை துரிதப்படுத்துவதற்கான கலந்துரையாடல் இடம்பெற்றதனைத் தொடர்ந்து பொறுப்பேற்றுக்கொண்ட குழுக்கள் சிறப்பாக செய்து வருகின்றனர்.

அதேபோன்று பெரிய உப்போடை கிராமத்திலும் இவ்வாறான வண்டி வழங்கப்படவுள்ளபோதிலும் மக்களுடன் தொடர்பு கொண்டு அதனை பொறுப்பேற்று நடாத்துவதற்கான குழுவொன்றினை அமைப்பதற்கான ஏற்பாடுகளை இம்மாதம் மேற்கொண்டிருந்தோம். இருப்பினும் மக்களின் முன்வருகின்ற தன்மை குறைவாக காணப்படுவதனால் மாநகர சபையுடன் இணைந்து 3 கிராமங்களினதும் குழுக்களை வலுப்படுத்துவதற்கான திட்டமிடலை மேற்கொண்டு வருகின்றோம்.

## பெண்கள் மற்றும் விவசாய குழுக்களின் முகாமைத்துவ கொள்ளளவினை கட்டியெழுப்புதல்
## Management Capacity building for farmers & women groups

ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவு, மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர், ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி கிழக்கு செல்வாநகர், கல்லடி வேலூர், ஏறாவூர்-6 கிராமங்களில் இயங்கி வரும் தாய்மார் சங்கத்தினை வலுவூட்டும் நோக்காக கொண்டு சங்கங்களுக்கு மாதாந்த கலந்துரையாடல்கள், பயிற்சிகள், போன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். அந்த வகையில் சங்கங்களின் செயற்பாடுகள் வருமாறு.

கல்லடி தாய்மார் பெண்கள் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக

கல்லடி வேலூர் தாய்மார் பெண்கள் சங்கத்தின் பொதுக்கலந்துரையாடல் 23.09.2012 திகதி கிராம சேவகர் அலுவலகத்தில் தலைவி அவர்களின் தலைமையில் மாலை 4.00 மணிக்கு ஆரம்பமானது. இக்கலந்துரையாடலுக்கு 13 பேர் கலந்து கொண்டனர். கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

- புதிய நிர்வாக தெரிவு செய்தல் வேண்டும்.
- கடன் பெற்றவர்கள் மாதாந்தம் மீளச் செலுத்தவேண்டும். நடவடிக்கை மேற்கொள்ளல்
- 02.10.2012 பொதுக் கலந்தரையாடல் நடைபெறுதல் வேண்டும்.

குறிப்பாக பெண்கள் அமைப்புக்களின் மாதாந்த கூட்டத்தினை தொடர்ந்து நடாத்துவதற்கு உதவியாய் செயற்பட்டு வருகின்றோம்.

## அனர்த்த முன்னாயத்த திட்டமிடல் (Develop Disaster Resilient Community).

கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 17 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் அனர்த்த முகாமைத்துவ குழுக்களினை உருவாக்குதல் அல்லது புனரமைப்பு செய்து அவர்களுடன் இணைந்து கிராமத்திற்கான இடர் வரைபடம் மற்றும் அனர்த்த முன்னாயத்த திட்டமிடலினையும் தயாரித்து வருகின்றோம். அந்த வகையில் இம்மாதத்துடன் சகல கிராம சேவகர்களுக்குமான வரைபடம் வரையும் வேலைத்திட்டம் நிறைவுபெற்றது. குறிப்பாக 18.09.2012,22.09.2012,20.09.2012 ஆகிய திகதிகளில் பேரிலாவெளி மற்றும் தேவபுரம் ,சந்திவெளி ஆகிய கிராமங்களுக்கான வரைபடம் வரையும் வேலைத்திட்டம் நிறைவடைந்துள்ளது.

மேலும் கணனில் வடிவமைக்கப்பட்ட வரைபடமானது இம்மாதம் 19.09.2012 சகல கிராம சேவகர்களிடமும் மீள் திருத்தத்திற்காக கொடுக்கப்பட்டு 26.09.2013 பெற்றுக்கொள்ளப்பட்டது.





## இலவச செயற்பாடு

பணியாளர்கள் கணனி கற்கவரும் மாணவர்களையும் இணைத்துக்கொண்டு அனைவரும் இணைந்து கல்லடி முதியோர் இல்லத்திற்கு மாதந்தோறும் உணவு வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இம்மாதம் அலுவலக ஊழியர்களினால் 26.09.2012 முதியோருக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இவ் செயற்ப்பாட்டினை தொடர்ந்தும் மாதந்தோறும் செய்வதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## வளநிலைய பயன்பாடு

சொண்ட் அமைப்பானது மக்களின் வாசிப்பு திறன் மற்றும் அனைவருக்கும் கணனி அறிவு ஆகிய நோக்கத்தின் அடிப்படையில் இலவச நூலக சேவை மற்றும் இலவச கணனி சேவைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதனடிப்படையில் 3 இளையோர்கள் கணனி கற்பதற்காக எமது அமைப்பில் இணைந்து கொண்டுள்ளார்கள். மேலும் 36 சிறுவர்கள் 1 அரச உத்தியோகத்தர் 12 இளையோர் உட்பட 49 பேர் கணனி கற்க்கையினை மேற் கொண்டுள்ளார்கள்.

SOND

# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## Mine Risk Education

## மிதிவெடி அபாயக்கல்வி செயற்திட்டம்

20.09.2012 வேலணைப்பிரதேசத்தில் பாடசாலை மட்டத்திலான மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வினை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

SOND மிதிவெடி அபாயக்கல்வி திட்டத்தின் மூலம் மிதிவெடி அபாயக்கல்வியினை வழங்கும் போது கிராமங்களில் இனம் காணப்பட்ட மிதிவெடி மற்றும் போரினால் பாதிக்கப்பட்வர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் அவர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கான உதவிகளும் முச்சக்கரவண்டி, துவிச்சக்கரவண்டிகள் 04.09.2012 வழங்கப்பட்டது.








SOND

# Non State Actors in Development Project அரசசாரா செயற்பாட்டாளர்களின் அபிவிருத்தி செயற்திட்டம்

**11.09.2012** நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள J/109 சங்கிலியன்தோப்பு 03 பயனாளிக்கும், J/114 திருநெல்வேலி மத்தி வடக்கு 04 பயனாளிக்கும் ,J/119 கோண்டாவில் வடகிழக்கு 01 பயனாளிக்கும் ,J/121 கொக்குவில் வடகிழக்கு 02 பயனாளிக்கும் ,கோண்டாவில் கால் நடைவளர்ப்பு நிலையத்தில் வைத்து மொத்தம் 10 பயனாளிக்கு ஆடு வழங்கப்பட்டது.

15.09.2012 நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய பிரதேச செயலக பிரிவில் சிறுகடை 18 வாழ்வாதார பயனாளிகளுக்கு மூன்று வகையான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன

- ❖ சிற்றுண்டி தயாரிப்பு
- ❖ சிறுகடை வியாபாரம் - 1
- ❖ தோல் பொருள் வியாபாரம் - 1

16.09.2012 சண்டிலிப்பாய் வடக்கு **WRDS** சங்கத்தினரால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் தையல் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

19.09.2012 J/84 நாவாந்துறை சனசமூகநிலையத்தினால் பொதுக்கூட்டம் வைக்கப்பட்டது. இதில் மொத்தம் 21 **M:-9, F-12** கலந்துகொண்டனர்.

23.09.2012 20 **CSO** அமைப்பு நிலைபற்றிய மதிப்பீடும் கலந்துரையாடல் 09.30 – 11.30 மணிவரையும், மக்கள் மன்ற, பொது ஒருங்கிணைப்பு குழுக்கலந்துரையாடல் 11.30 – 01.00 மணிவரையும் SOND நிறுவனத்தில் நடைபெற்றது ஆண்கள் 14 பெண்கள் 25 உட்பட 39பேர் கலந்து கொண்டனர்.








SOND

## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

.சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.